வாழ்வில்

# ஆனந்தம் எங்கும் ஆனந்தம்

பெற வாழ்த்துகின்றோம்











ஆக்கியோன் :

தமிழக அரசின் சிறுவர் இலக்கிய விருது பெற்ற

## பாபநாசம் குறள்பித்தன்

அன்புடனும் பாசத்துடனும் ஆசியுடனும்

வழங்குபவர்

பாண்டிச்சேரி டாக்டர் N. தர்மராசன்

வாழ்வில்

# ஆனந்தம் எங்கும் ஆனந்தம்

பெற வாழ்த்துகிறோம்

இனிய மாப்பிள்ளை
அ. சம்பத் அவர்களுக்கு,
தீபாவளி வாழ்த்துக்களோடு,
அன்புடன்
பித்தன்
04/11/08

தமிழக அரசின்
சிறுவர் இலக்கிய விருதுபெற்ற

## பாபநாசம் குறள்பித்தன்


டாக்டர் N.தர்மராஜன் வைத்தியசாலை,
278, மறைமலை அடிகள் சாலை,
(புதிய பஸ் ஸ்டாண்டு - நெல்லித்தோப்பு சிக்னல் அருகில்)
பாண்டிச்சேரி - 605 013.
போன்: 0413-2201294 செல்: 94432 23025

# அன்புப் பரிசு



சித்த மருத்துவ மேதை

பாண்டிச்சேரி

## திருமிகு டாக்டர் என்.தர்மராஜன்

அவர்களின் பிறந்த நாள் பரிசு

29.09.2004

# வாழ்த்தி மகிழ்கிறேன்!

- பாபநாசம் குறள்பித்தன்

இதயம் எல்லோருக்கும் இடது பக்கம்தான் இருக்கிறது. அதுவும் கையளவுதான். அது நாள் ஒன்றுக்கு 103680 தடவைகள் துடிக்கவும் செய்கிறது.

அப்படித் துடிக்கின்ற துடிப்பில்... மொழிக்காகவும், நாட்டுக்காகவும், அன்பிற்காகவும், மனித நேயத்திற்காகவும் எத்தனை பேருக்குத் துடிக்கிறது...? இப்படி ஒரு கேள்வியைப் போட்டால் பலர் இதயமே இல்லாது போய்விடுகிறார்கள்.

இவர்களை மீறி ஒரு சிலருக்கு மனித நேயத்தோடு துடிக்கும்! அப்படி துடிக்கின்ற இதயம்தான் ஐயா சித்த மருத்துவ மேதை டாக்டர் என்.தர்மராஜன் அவர்களின் இதயம்! ஈரமாய் வளர்ந்த உதயம்!

இது அவர்களுக்கு மட்டும் எப்படி....? அவர் என்னுள் பதிவானது எப்படி...? இப்படி...?

ஐயாவின் மருத்துவப் பணியோடு அவர்களது ஆன்மீகப் பணியினையும், கல்விப் பணியினையும் பல ஆண்டுகளாக பத்திரிகைகள் வழியே பார்த்திருக்கிறேன்.

அதனால், சென்னை வரும்போது பார்க்க விரும்பினேன். என் விருப்பத்தை நண்பர் மா.இராமதாசு எம்.ஏ., வழியே கூறி, சந்திக்கும் நேரம் கேட்டுவரச் சொன்னேன். அவரும் கேட்டு வந்தார். சந்திக்கச் சென்றேன்...

முதல் பார்வை; முதல் பேச்சு... 'புலவர் ஐயா, வாங்க, உட்காருங்க. நான் என்ன செய்யணும்...?'

இந்த வார்த்தைகள்தான், ஐயா என்னுள் பதிவானதற்குக் காரணம்!

என் பத்திரிகை வாழ்வில், பேட்டிக்காக பல நூறு மருத்துவர்களைச் சந்தித்திருக்கிறேன்; பழகி இருக்கிறேன். சிலரை மறந்துமிருக்கிறேன்; சிலர் மறக்கக்கூடிய அளவிலே நடந்தும் இருக்கிறார்கள்...

இவர் மட்டும் எப்படி என்னுள் பதிவானார்...? இவர் மருத்துவராக இருந்ததால் 'அல்ல! அதற்கும் மேலாக மனித நேயப் புனிதராக இருந்ததால் மட்டுமே என்பதை மெதுவாக இங்கே நான் பதிவு செய்தாக வேண்டும்.

உண்மையை உரக்கச் சொல்ல வேண்டும் என்பதல்ல, மெதுவாகவும் சொல்லலாம். ஏனெனில், அது உண்மை. அது அழியாது.

அதனால்தான்.

எங்களின் இரண்டே சந்திப்பு... அதற்குள் என் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும் நான் என்ன செய்ய வேண்டும்? என்ற அவரது இதய விரிப்பு...! அதைக்கேட்டு என்னுள் சிலிர்ப்பு.

சிறுவர் நூல்களும், ஆன்மீக நூல்களும் எழுதி வருகின்ற என் உள்ளம் அறிந்த ஐயா அவர்கள், ''என் பிறந்த நாளில் தங்களின் சிறுவர் பாடல்களை புதுவையில் அரங்கேற்றம் செய்கிறேன்'' என்றார்கள்.

என்னுள் வியப்பு! 60-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள நான் நினைத்துப் பார்க்கிறேன்; ஐயாவை கூர்ந்து பார்க்கிறேன். என்ன இதயம் இவருக்கு...!

அவரே சொல்கிறார்...

''எனக்கு தங்கள் நூலை வெளியிடுவது பெரிய விசயமல்ல...''

நான் சொல்கிறேன்...

''எனக்கு எழுத்து ஜீவன். ஜீவனமும் அதுதான்.''

''அப்படியா... தங்கள் பொருளாதாரத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்...''

சொன்னதுபோல் உடன் செய்கிறார்... நான் அடிபட்டுப் போகிறேன்.

பாரதத்தில் தர்மரை
படித்திருக்கிறேன் - இன்று
பாரதத்தில் 'தர்மராஜரை'
பார்த்திருக்கிறேன்; பழகி வருகிறேன்!
இது நட்பின் வரலாறு; ஈரமாய்
நடக்கும் பாலாறு!

ஐயா அவர்களின் பிறந்த நாளில் நானும் உங்களோடு இந்நூல் வழியே 'அவர் பல்லாண்டு நலமோடும் வளமோடும் வாழ்க' என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

எப்போதும் போல் என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார் நீலாகண்ணன் அவர்களுக்கு என் நன்றியும், வணக்கமும்.

இந்நூலை படிக்க - படித்துக் கொண்டிருக்கின்ற அரும்புகளுக்கு என் வாழ்த்துக்கள்.

**பாபநாசம் குறள்பித்தன்,**
16/52, பக்தவத்சலம் காலனி முதல் தெரு,
வடபழனி, சென்னை-26.
போன்: 24814746.

# தொழில் வாழ்த்து!

உழைப்பவர் தெய்வம்
உழவர் தெய்வம்
உண்மை உரைப்பவர்
என்றும் தெய்வம்!

அன்பாய் இருப்பவர்
அறத்தை வளர்ப்பவர்
பண்பாய் இருப்பவர்
பாரினில் தெய்வம்!

பிறருக்கு உதவும்
பரிவு கொண்டவர்
உறவுக்கு என்றும்
உறுதியாய் நிற்பவர்;

நம்பிக்கை வழியே
நலங்கள் சேர்ப்பவர்
என்றும் இங்கே
உதய தெய்வம்!

அன்னை, தந்தை
ஆசான், சான்றோர்
என்றும் வணங்கும்
இதய தெய்வம்!



## மொழியே தாயடா!

கன்னித் தமிழே
விழியடா!
கற்றோர் வழியே
சிறப்படா!

அன்பு மொழியே
தாயடா!
அறிவு மொழியை
கேளடா!

பண்பு வளர
நில்லடா!
பகுத்து அறிவை
தேடடா!

விதியை மதியால்
வெல்லடா!
நதிபோல் வாழ்வில்
செல்லடா!

கோயில் தினமும்
செல்லடா!
குறைகள் உனக்கு
ஏதடா...?



# எங்கும் இன்பம்; தம்பி!

தட்டாம் பூச்சியைப் பிடிக்காதே!
தவளையை நீயும் அடிக்காதே!
சிட்டுக் குருவியை விரட்டாதே!
சிலந்தி வலையை அறுக்காதே!

பூனை நாயை வெறுக்காதே!
பாம்பு குரங்கை பழிக்காதே!
யானை குதிரையை ஒதுக்காதே!
யாவும் நமக்கு தோழர்களே!

அவைகள் நம்மை அடிக்கிறதா?
அவைகள் நம்மை வெறுக்கிறதா?
அவைகள் நம்மை கடிக்கிறதா?
அவைகள் நம்மை பழிக்கிறதா?

அன்பாய் என்றும் இருந்திடின்
அடிதடி என்றும் நடக்காது!
பண்பாய் நட்பாய் பழகிடின்
பகைமை என்றும் முளைக்காது!

சின்னச் சின்னக் குழந்தைகளே!
சிந்தனை செய்து பாருங்கள்!
எண்ணம் ஏற்றம் பெற்றுவிடும்
எங்கும் இன்பம் மலர்ந்துவிடும்!



# குறள் படிப்போம்!

திருக்குறள் படித்தால்
தன்னலம் போகும்!
திருக்குறள் படித்தால்
தளர்நடை மாறும்!

திருக்குறள் படித்தால்
தாய்மனம் சேரும்!
திருக்குறள் படித்தால்
தன்மானம் வளரும்!

திருக்குறள் படித்தால்
தெளிவுகள் வழியும்!
திருக்குறள் படித்தால்
தீண்டாமை ஒழியும்!

திருக்குறள் படித்தால்
தீமைகள் வாடும்!
திருக்குறள் படித்தால்
தோல்விகள் ஓடும்!



# தோட்டம் போடுவேன்!

வீட்டைச் சுற்றி நானுமே
விதவித மாய் பயிர்களை
பாட்டுப் பாடி நடுவேனே
பதமாய் நீரும் விடுவேனே!

கத்திரி, வெண்டை செடிகளும்
கொய்யா, பலா மரங்களும்
பள்ளம் தோண்டி வைப்பேனே
பாங்காய் அவைகள் வளருமே!

முல்லை, மல்லி கொடிகளும்
பறங்கி, அவரைக் கொடிகளும்
நல்ல தென்னை மரங்களும்
நானும் வைக்கப் போறேனே!

காலை மாலை தோட்டத்தில்
காற்று வாங்கி உலவுவேன்
நாளும் எனது உடலிலே
நன்மை பலவே கூடுமே!



# கராத்தே கற்கலாமே!

கராத்தே படிக்கலாமே
கட்டுடல் கொள்ளலாமே!
தீயவர் நெருங்கிடின்
தற்காத்து நிற்கலாமே!

வெட்ட வெளியினிலே
வெள்ளை உடையினிலே
இடையில் பெல்ட்டுடனே
கராத்தே படிக்கலாமே!

வெறும்கை கலையிதுவே
வியக்கும் நிலையிதுவே
தற்காப்பு நிதியிதுவே
தமிழ்நாட்டு கலையிதுவே!

ஒழுக்கம் ஓங்கிடுமே
உயர்வு சேர்ந்திடுமே
கலக்கம் நீங்கிடுமே
கராத்தே கற்றுவிட்டால்!

நம்பிக்கை வந்திடுமே
நற்புகழ் தந்திடுமே
தம்பி தங்கைகளே
தற்காப்பு கலையறிந்தால்!



## படிக்கலாம்!

குச்சி ஐஸ் வேணுமா?
கோபாலா கோபாலா...
குச்சி ஐஸ் வேணாமே
கோவேந்தா கோவேந்தா!

கப் ஐஸ் வேணுமா...?
கோபாலா கோபாலா...
கப் ஐஸ் வேணாமே
கோவேந்தா கோவேந்தா!

அல்வா பூந்தி வேணுமா...?
கோபாலா கோபாலா...
அல்வா பூந்தி வேணாமே
கோவேந்தா கோவேந்தா!



கொய்யாப் பழம் வேணுமா?
கோபாலா கோபாலா...
கொய்யாப் பழம் வேணாமே
கோவேந்தா கோவேந்தா!

என்ன வேணும் சொல்லடா?
கோபாலா கோபாலா...
படிக்க நல்ல புத்தகம்
எனக்கு வேணும் கோவேந்தா!

சங்க நூல்கள் யாவுமே
எங்கள் வீட்டில் இருக்குது!
எழுந்து நீயும் வாயேண்டா
எடுத்து உனக்குத் தருகிறேன்...!

உண்மை நண்பன் நீயடா
எனக்கு நீயும் உயிரடா!
இதோ எழுந்து வருகிறேன்
இணைந்து நாமும் படிக்கலாம்!

# வேண்டும் தம்பி!

உண்மை, உழைப்பு, நம்பிக்கை - தம்பி
உனக்கு வேண்டும் வாழ்வினிலே!
அன்பு அறம் ஈகையும் - தம்பி
என்றும் வேண்டும் வாழ்வினிலே!

அறிவு, ஆண்மை, நேர்மையும் - தம்பி
உனக்கு வேண்டும் வாழ்வினிலே!
பரிவு பாசம் பண்பும் - தம்பி
என்றும் வேண்டும் வாழ்வினிலே!

ஒழுக்கம் நட்பு உயர்குணமும் - தம்பி
உனக்கு வேண்டும் வாழ்வினிலே!
இணக்கம் இனிமை எளிமை - தம்பி
என்றும் வேண்டும் வாழ்வினிலே!



## அழாமல் தூங்கம்மா!

அம்மா போட்ட பூந்தொட்டில் - நீ
அசைந்து ஆடும் துணிக்கட்டில்!
சும்மா சும்மா அழாமல் - நீ
சுகமாய் தூங்கும் மணிக்கட்டில்!

கண்ணே பாப்பா அழாதே - அம்மா
கடைக்குப் போறாங்க அழாதே!
தின்ன உனக்கு பழம்வருமே - நல்ல
தித்திப்பு மிட்டாயும் உடன்வருமே!

அம்மா வேலை செய்யணுமே - துடைத்து
அடுப்பை பற்ற வைக்கணுமே!
பஞ்சாய் இட்லி அவிக்கணுமே - நான்
பள்ளி சென்று படிக்கணுமே!

அழுது கொண்டே நீயிருந்தால் - வீட்டில்
எப்படி வேலை நடக்குமம்மா?
அம்மா வருவாங்க தூங்கம்மா - நீ
அழாமல் இருந்தால் நலமம்மா!



## வாழ்வில் உயரணும்!

காலை மாலை படிக்கணும்
கணக்காய் பாடம் எழுதணும்
வேலை செய்ய என்றுமே
விரும்பி மனது இருக்கணும்!

அம்மா அப்பா சொல்வதை
அன்பாய் நாளும் கேட்கணும்
தம்பி, தங்கை நண்பரிடம்
தாராளமாய் பழகணும்!

வயது முதிர்ந்த பேரிடம்
வணங்கி என்றும் இருக்கணும்
வயது குறைந்த பேரிடம்
வாழ்த்து கூறி மகிழணும்!

சோம்பல் தவிர்த்து இருக்கணும்
சோதனை களைத் தாண்டணும்
வீணில் பேச்சைக் கழிக்கணும்
வாழ்வில் நாமும் உயரணும்!



# மறக்காதே!

பல்பம் பென்சில் பேனாவை
காதில் விட்டு குடையாதே!
செருப்பு இன்றி நீயுமே
தெருவில் என்றும் செல்லாதே!

வீதியில் தூங்கும் நாயையும்
தேடிச் சென்று அடிக்காதே!
ஆறு குளம் ஏரியில்
அசுத்தம் என்றும் செய்யாதே!

விளையாட்டு வேளையிலே
வீணில் வம்பு இழுக்காதே
நிலையான நட்புடனே
பழக என்றும் மறக்காதே!

யாரையும் இழிவாய் பேசாதே
யாரையும் தாழ்வாய் நினைக்காதே!
யாவரும் ஒன்று என்பதையே
வாழ்வில் உணர மறக்காதே!



# அறமே சிறந்த பண்பாகும்!

கூட்டல் கழித்தல் படிக்கணும்
    கூடி யிருக்கப் பழகணும்
நாட்டம் கல்வியில் இருக்கணும்
    நாளும் நன்றாய் உழைக்கணும்!

தாயையும் தந்தையையும் மதிக்கணும்
    தாய்திரு நாட்டையே நினைக்கணும்
மாயை சாதியை மறக்கணும்
    மாண்புடன் சிறந்து ஓங்கணும்!

குறள்தான் உலகில் உயர்ந்தநூல்
    குறிப்பாய் உணர்ந்து பயிலணும்!
அறமே சிறந்த பண்பாகும்
    அறிந்து அதன்வழி நடக்கணும்!



# மழை



கருத்த மேகம் சேர்ந்தது
கணக்காய் மழையும் தந்தது!
பருத்திக் காடும் வளர்ந்தது
பவள மல்லியும் பூத்தது!

வாழை தாரை ஈன்றது
வயலில் கதிரும் சாய்ந்தது!
தாழை மடலும் அவிழ்ந்தது
தண்டுக் கீரையும் விளைந்தது!

குளத்தில் தாமரை மலர்ந்தது
கொக்கும் அங்கே இருந்தது!
அலைகள் வீசி ஆறுமே
ஆடிப் பாடி நடந்தது!

சிறகை விரித்து பறவைகள்
சேர்ந்து வானில் பறந்தன!
இறைவன் தந்த மழையினால்
எங்கும் இன்பம் பொங்குதே!



# வாருங்கள்...!

வங்கக் கடலுக்கு வாருங்கள்
வளமாய் காற்று வாங்குங்கள்!
பொங்கி வழியும் மகிழ்ச்சியில்
பூரித்து நீங்கள் நில்லுங்கள்!

கண்ணுக்கு எட்டிய தொலைவிலே
காண கப்பல் நிற்குமே!
விண்ணும் கடலும் சேர்ந்து
வியக்க வைத்து பேசுமே!

சர்க்கரை மணலில் கால்பதித்து
சேர்ந்து நீங்கள் நடக்கையிலே
பற்பல கதைகள் தோன்றுமே
பசுமையாய் நெஞ்சில் நிற்குமே!

சுண்டல் பட்டாணி ஐஸ்ஸும்
சுகமாய் வாங்கித் தின்னலாம்!
நண்பர்கள் சூழ இருந்திட்டால்
நாளும் மகிழ்ச்சிதான் உணருங்கள்!



## உயரணும்!

புத்தகங்கள் படிக்கணும்
பொது அறிவை வளர்க்கணும்
கத்தும் கடல் ஓரமாய்
காற்றுவாங்கி நடக்கணும்!



காலை மாலை குளிக்கணும்
காலில் செருப்பு அணியணும்
வேலை செய்ய விரும்பணும்
வேளையோடு உண்ணணும்!

உண்மை நன்றி போற்றணும்
உயர்ந்த எண்ணம் கொள்ளணும்
அன்னை தந்தை மொழியினை
என்றும் நாமும் கேட்கணும்!



மொழியை விழியாய் கருதணும்
மூத்தோர் சொல்லை மதிக்கணும்!
பழியை வாழ்வில் கலையணும்
பாரில் நாமும் உயரணும்!



# இதயம் மகிழ்கிறேன்!

ஆற்றில் வெள்ளம் புரளுதே
ஆடிப் பாடத் தோணுதே!
நாற்று தலையை அசைக்குதே
நீரில் மீனும் துள்ளுதே!

கொடியில் மலர்கள் மலருதே
கோட்டுப் பூவும் மணக்குதே!
படபட வென்று பறவைகள்
பறந்து வானில் மிதக்குதே!

வானும் மலையும் நிற்குதே
வற்றாக் கடலும் பாடுதே!
பாலாய் அருவி கொட்டுதே
பாங்காய் மரங்கள் பேசுதே!

மானும் மயிலும் மேயுதே
மந்தியும் மரத்தில் தாவுதே!
தேனும் அடையில் தூங்குதே
தென்றல் மெல்ல தழுவுதே!

என்ன என்ன புதுமைகள்
இயற்கை தந்த அற்புதம்!
இன்னும் காண விழைகிறேன்
இதயம் முழுதும் மகிழ்கிறேன்!



# இப்படி வாழ்க...!



உண்ணும் உணவில் தானே
உப்பு, காரம் குறையணும்!
உண்ணும் உணவில் தானே
கீரை, காய்கள் நிறையணும்!

தினமும் எட்டு குவளைகள்
தண்ணீர் குடித்துப் பழகணும்!
தினமும் இரண்டு வேளையே
அரிசி உணவு கொள்ளணும்!

வேளை தவறி உண்பதை
என்றும் நாமும் தவிர்க்கணும்!
உண்ட உணவு செரித்ததும்
உணவு கொள்ள நினைக்கணும்!

காலை மாலை வெளியிலே
கணக்காய் பயிற்சி செய்யணும்!
காலம் முழுதும் வாழ்விலே
களிப்பில் நாமும் திளைக்கணும்!

இன்றே யாவும் செய்திடின்
இல்லை நமக்கு நோய்களே!
அன்றே சொன்ன சித்தர்கள்
அரிய உண்மை இதுவாகும்!



## உண்மை நண்பன்...?

உன்னை மதிப்பான்
அறிவை வளர்ப்பான்
பண்பை பதிப்பான்
பரிவை கொடுப்பான்!

அன்பை விதைப்பான்
ஆசையை ஒழிப்பான்
உண்மையை உரைப்பான்
உழைப்பை அளிப்பான்!

கண்ணியம் காட்டுவான்
கடமையை ஊட்டுவான்
உன்னையே உலகினில்
உயர்த்திட எண்ணுவான்!



பழியைச் சேர்க்கான்
பகைமை காட்டான்
விழியாய் என்றும்
வாழ்வில் இருப்பான்!

அவனே உனக்கு
உற்ற நண்பன்!
அவனே உனக்கு
உயிர்த்துணை ஆவான்!

அந்த நண்பன்...?
அறிவுப் புத்தகம்!
இந்த உண்மை
உனக்கு போதும்...!

என்றும் நட்பு
அவனோடு இருந்தால்
உந்தன் வாழ்வு
உயர்ந்து நிற்கும்!

# வேணும் பொறுப்பு!

கூடு கட்டும் குருவி
மலையில் தொங்கும் அருவி!

கிளி பாடும் பாட்டு
எழுத உதவும் நோட்டு!



பழம் தானே இனிப்பு
பாகற்காய் கசப்பு!

கொக்கு தானே வெள்ளை
தென்னை தானே பிள்ளை!

உளுந்து தானே கறுப்பு
நமக்கு வேணும் பொறுப்பு!



## வாழ்ந்திடுவோம்!

மண்ணில் அமுதம் மழையாகும்
மக்கள் உயிரே அதுவாகும்!
எண்ணிப் பார்த்தால் வியப்பாகும்
என்றும் மழைதான் உவப்பாகும்!

காடு கழனி செழித்திடவும்
கால்நடை பறவை வளர்ந்திடவும்
வீடும் நாடும் வளம்பெறவும்
வேண்டும் என்றும் மழைநீரே!

நீரை வீணில் தேக்காமல்
நித்தம் நாமும் இருந்தாலோ
ஊரும் உலகும் பாழாகும்
உணர்ந்து தினமும் செயல்படுவோம்!

அன்ன நீராம் மழைதனையே
என்றும் பாது காத்திடவே
ஒன்று கூடி நின்றிடுவோம்
உலகில் உயர்ந்து வாழ்ந்திடுவோம்!



# நலம் காணுவோம்!

நாட்டு நலம் கூடவும்
நமக்கு நலம் பேணவும்
வீட்டுப்புறம் யாவையும்
விரும்பி தூய்மை ஆக்குவோம்!

வீட்டைச் சுற்றி நீரிருந்தால்
வளரும் கொசுக்கள் பலகோடி!
நாட்டில் பரவும் பலநோய்கள்
கொசுவால் தானே வ(ள)ருகிறது!

குப்பை கூளம் போட்டுவைத்தால்
கரப்பான், பாம்பு, தேள்களும்
பதுங்கி வாழ வந்துவிடும்
பலவித தொல்லைகள் தந்துவிடும்!

அறிவில் தெளிவைப் பெற்றிடுவோம்
அன்றாடம் தூய்மை செய்திடுவோம்
சுற்றுப் புறத்தைக் காத்திடுவோம்
சுகமான வாழ்வைத் தேடிடுவோம்!



## கடலே!

அலையாடும் கடலே
அழகான கடலே
நிலையான கடலே
நலம் சேர்க்கும் கடலே!

உண்ணுகின்ற உணவில்
உப்பாக வருவாய்!
மின்னுகின்ற கழுத்தில்
முத்தாக சிரிப்பாய்!

வேண்டாத பொருளையே
வெறுத்துமே மறுப்பாய்!
வேண்டிய பொருளையே
விரும்பியே சேர்ப்பாய்!

கடல்போலே ஆழம்
கல்வியில் வேண்டும்!
அலைபோலே நாமும்
உழைத்திடவும் வேண்டும்!



# தென்னை!

பச்சை ஓலை தென்னை
பாங்காய் நிற்கும் தென்னை
இச்சை யான இளநீரை
என்றும் தந்திடும் தென்னை!

ஓலைக் கையை வீசி
உயர்ந்து நேராய் நின்று
காலம் முழுதும் நமக்கு
கனிவாய் உதவும் தென்னை!

கூரை போட கீற்றும்
குழம்பு வைக்க காயும்
வீடு கட்ட மரமும்
விரும்பி தென்னை கொடுக்கும்!

தன்னை முழுதும் நமக்கு
தென்னை போலே நாமும்
அன்பாய் உதவி செய்தால்
அகிலம் செழிக்கும் என்றும்!



## சைக்கிள்!

**சை**க்கிள் ஒன்று வாங்குவேன்
சாலை மீது ஓட்டுவேன்
அக்காள் தம்பியை ஏற்றியே
அருமை யாக ஓட்டுவேன்!

வீட்டுப் பொருள்கள் வாங்கவும்
விரும்பி கோயில் போகவும்
பாட்டுப் பாடி நானுமே
பறந்து செல்வேன் சைக்கிளில்!

பள்ளிக் கூடம் செல்லவும்
பந்து விளையா டவும்
துள்ளி ஏறி சைக்கிளில்
துரித மாக செல்லுவேன்!

இன்று முதல் நானுமே
இனிய சைக்கிள் வாங்கவே
நன்றாய் நானும் சேமிப்பேன்
நல்ல சைக்கிள் வாங்குவேன்!



## படிக்க ஏங்குது அரும்பு!

**சி**ன்னப் பிள்ளைங்க நாங்க
சிரிக்க மறந்தோம் தாங்க
எங்க நிலைதானே இங்கே
மோசம் தினம் தாங்க!



பள்ளிக் கூடம் போயி
படிக்கத் தானே ஆசை!
அம்மா அப்பா வாலே
அதிகம் பிறந்தோம் நாங்க!

பத்து வயது ஆகல
பாரம் சுமக்கப் போகிறோம்!
எட்டு வயது ஆகல
எடுபிடிகள் ஆகிறோம்!

வெய்யில் மழையும் ஒண்ணுங்க
வீடும் வீதியும் ஒண்ணுங்க
பசியும் பட்டினியும் ஒண்ணுங்க
பாசம் என்றும் தூரங்க!

எங்க நிலைஎன்று மாறுங்க...?
இந்த நாடு என்று உயருங்க?
நாங்க பள்ளிக்குப் போகணும்
நலமுடனே வாழணும் சொல்லுங்க!

# புகழோடு...!

ஓடி ஆடி விளையாடு
        ஒவ்வொரு நாளும் குறள்பாடு!
மாடு ஆடு பறவையுடன்
        மகிழ்ந்து இருப்பாய் நட்போடு!

பள்ளி செல்வாய் விருப்போடு
        படித்து மகிழ்வாய் முனைப்போடு!
நல்லவை தேடு துடிப்போடு
        நாளும் வளர்க அன்போடு!

சான்றோர் சொல்கேள் பொறுப்போடு
        சோம்பலை தவிர்ப்பாய் முறையோடு
தோன்றும் தோல்வியை அடியோடு
        தோண்டி பள்ளத்தில் நீபோடு!

நூலகம் செல்வாய் நெறியோடு
        நுண்கலை அறிவாய் கருத்தோடு!
காலம் நேரம் நீயறிந்து
        கடமை முடிப்பாய் புகழோடு!



# மலர்கள்!

கொடியில் செடியில் மலருது
குளத்திலும் மரத்திலும் நடிக்குது
அடிக்கடி காற்றில் ஆடியே
அழகுக் கவிதையை எழுதுது!



அம்மா அக்கா தங்கையின்
அடர்ந்த கூந்தலில் புரளுது!
வண்ண வண்ண நிறங்களில்
விரிந்து நம்மை அழைக்குது!

பூவினில் தேனை எடுக்கவே
பூஞ்சிட்டு வந்து கூடுது!
பூவைப் போலே நாமுமே
பொழுதும் சிரித்து வாழணும்!

ஒற்றை காலில் நிற்குதே
ஒவ்வொரு வாசம் வீசுதே!
இறைவன் படைத்த படைப்பிலே
எத்தனை அழகு பாருங்கள்!



## மகிழ்ச்சி...!

ஆனா ஆவன்னா எழுதுவேன்
ஆங்கில எழுத்தும் எழுதுவேன்
கானா காவன்னா எழுதுவேன்
கணக்குப் பாடமும் எழுதுவேன்!

நிலவும் வானும் எழுதுவேன்
நீலக் கடலும் எழுதுவேன்
மலையும் காடும் எழுதுவேன்
மாடும் ஆடும் எழுதுவேன்!

மரங்கள் செடிகள் எழுதுவேன்
மானும் மயிலும் எழுதுவேன்
பறவைகள் வண்டுகள் எழுதுவேன்
பள்ளிகள் வீடுகள் எழுதுவேன்!

அருமை யான சிலேட்டும்
அப்பா வாங்கி தருவாரே!
பெருமை யோடு அதனையும்
பாது காத்து மகிழ்வேனே!





## நூலாசிரியரைப் பற்றி....



| | | |
|---|---|---|
| பெயர் | : | பாபநாசம் குறள்பித்தன் (த.வெ. கண்ணன்) |
| பெற்றோர் | : | தனம் - வெங்கிடாசலம் |
| பிறப்பு | : | 19.07.1946 பாபநாசம் (தஞ்சை மாவட்டம்) |
| படிப்பு | : | புலவர் (தஞ்சை கரந்தை தமிழ்ச் சங்கம்) |

- 1965 இல் முதன் முதலில் சுதேசமித்திரனில் எழுத்துத் தொடக்கம்.
- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்தி வந்த 'தாய்' வார இதழில் துணையாசிரியராக 10 ஆண்டுகள் பணி

## எழுதி வெளிவந்த நூல்கள்

| | |
|---|---|
| சிறுவர் நூல்கள் | - 23 |
| கவிதை நூல்கள் | - 5 |
| நாடகங்கள் | - 5 |
| ஆன்மிகம் | - 7 |
| பல்துறை நூல்கள் | - 25 |

## பெற்ற விருதுகள்

| | |
|---|---|
| விஜிபி விருது | - 1984 |
| மனித நேய அறக்கட்டளை விருது | - 2001 |
| திருப்பூர் தமிழ்ச் சங்க விருது | - 2002 |
| தமிழக அரசு விருது | - 2002 |

- சிவா பப்ளிகேஷன்ஸ்